# கலகலப்பு

Editor:
S. K. Thesan

ஆசிரியர்: எஸ். கே. தேசன்        உதவி: C. S. பாஸ்கர்


1970        2வது இதழ்

## பெயில் விட்டோர் சிறப்பிதழ்

மலர்:
இதழ் 60

பெப்ரவரி
மார்ச்







### ஜாக்கிரதை!

டேய் டேய், என்னடா படிக்கிற காலத்திலே மெற்றி ஷோ பார்த்து நேரத்தை வீணாக்கிட்டீங்க இப்ப மட்டும் ஏன்டா கவலைப்படுறீங்க தற்கொலை செய்யமட்டும் நினைச்சிக்க தொடங்கிட்டீங்களே ஜாக்கிரதை!

விவசாயி வளம் காண இந்நாளில் உழைப்பவர்கள்
புவியினிலே பஞ்சத்தை எந்நாளும் ஒழிப்பவர்கள்

A T C

AMPAL TRADING COMPANY
அம்பாள் ரேடிங் கொம்பனி
(கமிஷன் ஏஜெண்ட்)

தந்தி: அம்பாள்   78, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11   போன்: 29374

A T C

வருகிறது!
கமோன் பிக்ஷர்ஸ்
அளிக்கும்
'குதிரைக்கேன் கோக்காகோலா'

# கலகலப்பு

— ஆசிரியர் டோ —

## பரீட்சை முடிவு சிறப்பிதழ்

எட்டுப் பாடங்களில்
பரீட்சைக்கு தோற்றிய
ஜலவ்யூ அரக்
கொருக்கால் படக்
கதாநாயகி ஒருபாடத்தில்
திறமைச் சித்தி! மனையியல்
இரசிகர் சங்கம் கழுதைப்
பிட்டியில் நாளை
பாராட்டு விழா

★ இளைஞர்கள் திறமையை வெளிக்காட்டும் ஒரே இதழ் ★

## இரயில் தண்டவாளங்களை பொலிஸார் ஆயுதங்களுடன் ரோந்து!

பரீட்சை முடிவுகளை முன்னிட்டு நடைபெற இருக்கும் தற்கொலை முயற்சிகளை தடுக்கும் முகமாக பொலிஸார் தண்டவாளங்களை ஆயுதங்களுடன் ரோந்து வருகின்றார்கள்.

## குதிரை ஓடியவர் தலைமறைவு! குதிரைக்காரர் தலைகுனிவு?

எட்டுப் பாடங்களிலும் திறமைச் சித்திபெற்றுத் தருவதாகக் கூறி ரூபா 3500/– பெற்றுக்கொண்ட பிரபல குதிரை வீரரொருவர், பரீட்சையில் குறிப்பிட்டபடி சாதனை நிலைநாட்ட முடியாத காரணத்தினால் தலைமறைவாகியுள்ளார். குதிரை ஓடியவர் மனமுடைந்து பொலிஸாரிடம் புகார் செய்துள்ளார்.



## மாணவர் பரீட்சையில் தோல்வி ஆசிரியர் தற்கொலை!

பிரபல ரியூட்டரி ஒன்றில் மாணவர்கள் பலர் பரீட்சையில் தோல்வியடைந்ததன் காரணமாக அவர்களுக்குப் படிப்பித்த ஆசிரியர் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பலரது மனத்தையும் உருக்கியுள்ளது. ரியூட்டரியில் ஒரே பரபரப்பு! அதிபர் நிலைமையை சமாளிக்க முடியாது வெளிநடப்புச் செய்தார். பெயில்விட்ட மாணவர்கள் ஆர்பாட்டம் செய்தனர். ரியூசன் காசை திரும்பித் தரும்படி கோரி ரியூட்டரி முன்னால் மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் செய்கின்றனர். இந் நிலையில் பெற்றோர்கள் அந்த ஆசிரியரின் தன்மானத்தை பாராட்டியுள்ளனர்.

## விவசாய இரசாயனப் பொருள் விற்பனை நிலையத்தின்மீது இரகசியப் பொலிசார் கண்காணிப்பு!

பரீட்சை முடிவுத் தற்கொலைகளை தடுக்கும் முகமாக மேற்படி நிலையங்களை இரகசியப் பொலிசார் கண்காணிப்புச் செய்கின்றனர். அறிமுக அட்டை பரிசீலனை செய்யப்பட்டு மருந்துகள் விநியோகிக்கப் படுகின்றன.

நான்கு வாலிபர்கள் கூட்டாகச்சேர்ந்து பொலிடோலை அதிக பணம் இலஞ்சமாக கொடுத்து வாங்க முற்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

## காதலன் பரீட்சையில் தோல்வி! காதலி மூன்று நாள் உண்ணாவிரதம்!

### காதலை வாபஸ் பெற தீர்மானம்!

அறிவழகன் என்ற பெயருள்ள தனது காதலன் எல்லாப் பாடங்களிலும் பெயில் விட்டதனால் மனமுடைந்த காதலி மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு தனது காதலனிடம் தன்னை மறந்துவிடும்படி கோரி நீண்ட கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி உள்ளதாக எமது நிருபர் தெரிவித்துள்ளார்.

★ தோல்வியே வெற்றியின் அறிகுறி ★

## இயற்றியது இணுவை வாலி

பாடியவர் ☞ ஜே. பி. ☜

கௌரவமான தந்தை ஒருவர்
பரீட்சையில் தவறிய
பாலூட்டி வளர்த்த மகனை எண்ணித்
தாயைப் பார்த்துப் பாடிய

# இரங்கற் பாடல்

பள்ளியிலே படித்த பெடி,
படம் தினமும் பார்த்த பெடி,
நான் வளர்த்த பாவிப் பெடி,
நாசமாய்ப் போன பெடி!
ஐயய்யோ! வெட்கம்! ஐயய்யோ......
ஐயய்யோ! வெட்கம்! ஐயய்யோ.......!

ரீயூட்டரிக்குப் பீஸ் கொடுத்தேன்,
பெல்பொட்டம் நான் கொடுத்தேன்,
சடையை மட்டும் வளர்த்து விட்டு,
சனிபடிப்பை மறந்த தடி!
ஐயய்யோ! வெட்கம்! ஐயய்யோ!......
ஐயய்யோ! வெட்கம் ஐயய்யோ!......

நீதிக்கே தலை குனிந்தேன்,
நினைத்த தெல்லாம் நான் கொடுத்தேன்.
வேதனைக்கு ஒரு பெடியை,
வீணாகப் பெத்து விட்டேன்!
ஐயய்யோ! வெட்கம்! ஐயய்யோ!
ஐயய்யோ! வெட்கம்! ஐயய்யோ!

ஆண்டவனின் சோதனையோ?
கொம்பியூட்டர் வேலையிதோ?
பெயிலே விட்டு விட்டான்!
திரும்ப மீண்டும் எடுக்கப் போறான்!
ஐயய்யோ!... வெட்கம்... ஐயய்யோ!
ஐயய்யோ!... வெட்கம்... ஐயய்யோ!

## YFF இளம் விவசாயிகள் ஒன்றியம்

### (பௌர்ணமி தினம் 15-3-1976)

எமது அடுத்த இளம் விவசாய ஒன்றியத்தினரின் பௌர்ணமி தினம் மண்வள, நீர்வள, பயிர்வள கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் உட்பட கொழும்புத்துறை 'செங்கதிர்ச் செல்வன்' பண்ணையில, மேற்படி பண்ணையின் அதிபர் திரு. பொன்னம்பலம் ஆதரவில் 15–3–1976 அன்று நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற இருக்கும் இந்த நிகழ்ச்சிகளின் விபரங்கள் கழகங்களுக்கு அனுப்பப்படும். புதிய ஒன்றிய அங்கத்தவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். மேலதிக விபரங்களுக்கு:

தலைவர், இ. வி. க. ஒன்றியம், இணுவில்
காரியதரிசி, இ. வி. க. ஒன்றியம்,
18/2, யாழ் வீதி, யாழ்ப்பாணம்

# கயிறுகள் விற்பனை தடை!

பரீட்சை முடிவுகளை முன்னிட்டு அதிகளவு கயிறுகள் விற்பனையாகலாம் என்று உற்பத்தியை அதிகரித்த கயிறு திரிப்போர் சங்கத்தினருக்கு அரசாங்கத்தின் இத் திடீர் முடிவு அதிர்ச்சியை கொடுத்துள்ளது! இடையில், 196 இருத்தலுள்ள பெண் ஒருத்தி பரீட்சைத் தோல்வியினால் மனமுடைந்து கயிறில் தூங்கிய போது, அக்கயிறு அறுந்து கீழே விழுந்த போது காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. பத்தாம் வாட்டில் அனுமதிக்கப் பட்டிருந்த அவர் படுக்கையில் இருந்த படியே, ''உள்ளூர் பொருட்களை தான் இனி நம்பத் தயாராக இல்லை'' என்று கண்ணீரும் கம்பலையுமாக நமது. நிருபர் ஜே. பியிடம் தெரிவித்தார்.

## வறுமையில் செம்மை

மாலா: ''ஏண்டி மஞ்சு! என்னுடன் கதைக்காமலிருக்கின்றாய்!''

மஞ்சு: ''நீயோ பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை, நானோ ஏழை நீ தினம்தினம் புதிய உடைகளுடன் வருகிறாய் எனக்குத்தான் உப்பிடிப் போட வசதியில்லையே ''

மாலா: ''அடி மண்டு! நானும் ஏழை தான்! ஆனால் சிக்கனமான முறையில் எனது உடைகளை **மில்க்வைற் சலவைப் பவுடரால்** சலவை செய்கிறேன்! அதனால்தான் என்னுடைகள் என்றும் புதியவையாகப் பளிச்சிடுகின்றன!

மஞ்சு: ''அப்படியா! இனி நானும் பளிச்சிடும் வெண்மையான ஆடைகளையே அணிந்து பணக்காரி போல திகழ்வேன்!

**உண்மையில் மில்க்வைற் புதுமையானது தாண்டி!**

அதிக தூய்மையான, வெண்மையான
பளிச்சிடும் சலவைக்கு பாவியுங்கள்,

## ★ மில்க்வைற் சலவைப் பவுடர் ★

மாணவ மணிகளே!

சீருடைகளின் பளிச்சிடும் வெண்மைக்கு
கூடுதலான நீலம் கலந்த
மில்க்வைற் சலவைப் பவுடர் பாவியுங்கள்
பாவித்த மேலுறைகளை அனுப்பி பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவற்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்**

நங்கையரே! நீங்கள் விரும்பும்
நவநாகரீக உடைகளுக்கு
நாடுங்கள்!

## ஸ்ரீ வரதாஸ் புடவை மாளிகை

155, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்
(பஸ் நிலையம் முன்பாக) போன்: 7636

## ஆசிரியர் கருத்து!

# சோதனை! சாதனை!! வேதனை!!!

வாசகர்களே!

கலகலப்பு சென்ற இதழ் யாரும் எதிர்பார்க்காத வகையில் புதிய அமைப்பில் வெளிவந்தது. விற்பனையாகுமோ என ஏங்கிய வேளையில் நாமே எதிர்பார்க்காத வகையில் 10, 12 நாட்களுக்கிடையில் யாழ்ப்பாணப் பகுதியில் விற்பனையில் சாதனையையும், பல கைகளுக்கு கலகலப்பு கிடைக்காமலும் போய்விட்டது. இது பல விற்பனை பிரதிநிதிகள் நன்றாக அறிவீர்கள்.

தபால் சேவை ஒழுங்காக இல்லாமையால் கொழும்பிற்கு உரிய நேரத்திற்கு அனுப்ப முடியவில்லை. வழக்கமாகப் பத்திரிகையைக் குறை கூறுபவர்கள் எல்லோருமே ஏகோபித்த குரலில் பாராட்டியுள்ளனர். சென்ற இதழில், மரண அறிவித்தல், ராசிபலன், வாங்கலாம் விற்கலாம் பலரைக் கவர்ந்துள்ளது. காதல் விடயங்கள் சற்று கூட என ஒரு சில புகாரும் கிடைத்துள்ளது. கூடிய கன்னியர்கள் வாசகராகியிருப்பதை கடிதமூலம் அறிந்த கலகலப்பு அடுத்த இதழில் மகளிர் பகுதியை ஆரம்பிக்காமல் இருக்குமா?

தற்பொழுது முகம் கோணாமல் விளம்பரம் தரும் வியாபாரிகள் பிரமுகர்களை கலகலப்பு பாராட்டுகிறது. எங்கள் வளர்ச்சி உங்கள் கைகளில்.

—தீசன்

### அடுத்த இதழ்

கலகலப்பான புத்தாண்டு இதழ்

புதுமை அம்சங்கள், கேள்வி பதில், கனியாத பஞ்சாங்கம், மகளிர் பகுதி உங்கள் ஆக்கங்களை உடனே அனுப்புங்கள்.

## கன்னியர் உடையைப் பற்றி காளை நான் பாடமாட்டேன்

கவிதைகள் எழுதும் போது பலவகைக்கவிதை தோன்றும்
கன்னியர் நடையைப் பாடும் காளையர் சடையைப் பாடும்
அங்கவர் குணத்தைப் பாடும் அங்கத்தை விளக்கிப் பாடும்
காளை நான் கவிபுனைந்தால் கன்னியர் உடைதான் தோன்றும்.

சிறுஉடை பற்றிப் பாட சீறியே விழுகின்றார்கள்
மினியுடை பற்றிப் பாட மிதிப்போம் நாமென்கின்றார்கள்
மக்ஸியைப் பற்றிப் பாட மண்டையை உடைக்கிறார்கள்
கடவுளே மன்னிப்பீர் நீர், மினி பற்றிப் பாட மாட்டேன்.

பதினாறு முழத்தில் சாறி பகட்டில்லை யென்கின்றார்கள்
பஸ்ஸிலே செல்லும்போதும் மினியுடை தரிக்கின்றார்கள்
தங்கத்தை மறைக்கின்றார்கள் அங்கத்தை மறைக்கவில்லை
அய்யையோ! அசிங்கமையா! அவனை நான் பாடமாட்டேன்.

வேட்டி மடித்துக்கட்ட காவாலி என்கின்றார்கள்
சேட் 'பட்டின்' திறந்துவிட்டால் ரூ செக்ஸி என்கின்றார்கள்
கையிலும் முதுகிலும் தான் பெருவெளி விடுகின்றார்கள்
அங்கெலாம் காண்பதையோ ஐயையோ எழுதமாட்டேன்.

தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் தாங்கெட்ட நாகரிகத்தால்
கண்டதே காட்சியென்றும் கொண்டதே கோலமென்றும்
எம்கலை கலாச்சாரத்தின் குரல்வளை நசிக்கின்றார்கள்
எக்கொலை நடந்திடினும் உடைபற்றி பாடமாட்டேன்.

—இணுவையூர் வாலி

உங்களுக்குத் தேவையான
நல்லின முந்திரிகைக் கன்றுகளுக்கு
நாடுங்கள்
(87) சாந்தி தோட்டம் (87)
SHANTHY FARM
இணுவில்
உரிமையாளர்: S. சிவரத்தினம் இணுவில்
தொடர்பு முகவரி: S. K. ராசா சாந்தி தோட்டம் இணுவில்
மாணவர்களுக்கும் இளம் விவசாய அங்கத்தவர்களுக்கும் 25% கழிவு விலையில் முந்திரிகைக் கன்றுகள் வழங்கப்படும்.

# அமெரிக்க
# னுபவங்கள்

எஸ். கே. நிசன்

(சர்வதேச இளைஞர் மாற்றுத்திட்ட பிரதிநிதி 74 '')

**தம்பி! நீர் அமெரிக்காவிலிருந்து ஒருவரையும் கூட்டிவரவில்லையோ!**

**உண்மையாக அமெரிக்கா சென்றீரோ!**

ஆளைப்பார்த்தால் அமெரிக்கா சென்றவர் மாதிரிதெரியவே இல்லை!'' என்னைப் பார்த்துச் சிலர்மூக்கைச் சுழித்துக் கொண்டனர். அமெரிக்காவில் இருந்து நான் திரும்பிய பின்னர் எனது தலையைப் பார்த்து விட்டு (நான்சடை வளர்க்காததால்)

''என் தம்பி, நீர் அமெரிக்காதானே போனனீர்?'' என வியப்புடன் கேட்டனர் பலர். வெளிநாடு சென்றவர்கள் பெரும்பாலும் சடையுடன் தான் வருவார்கள் (என்னைப் போன்ற ஒரு சில பட்டிக் காடுகளை தவிர)

மேலும் ''தம்பி தனியத்தானே வந்தனீர், என அழுத்தம் திருத்தமாக கேட்டனர். அதன் உட்பொருள் ''நீர் வெள்ளைக்காரி யொருத்தியைக் கொழுவிக் கொண்டு வரவில்லைஎனபதே!

அமெரிக்காவில், தலைமயிர் வெட்டும் செலவு 3 டொலர். கிட்டத்தட்ட 3 × 11.65—34.85 சதம் நான்கு தடவைகள் தலைமயிர் வெட்ட செலவிட்ட தொகை 12 டொலர்—139.80 சதம்.
எமது அரசாங்கம் எடுத்துச் செல்ல அனுமதித்த தொகை. 1000 ரூபா.

கறுப்புநிறத் தலைமயிரைக் கண்ட அமெக்க பெண்கள் தலையைப் பிய்த்து எடுத்துவிடுவார்கள் பல நிகழ்ச்சிகளின் போது பலர், இளம் பெண்கள் உட்பட எனது தலைமயிரில் கூடிய கவனம் செலுத்திக் கொண்டதுடன், தொட்டும் பார்த்தார்கள். இதனால் நான் அடிக்கடி தலையை வாரிக்கொள்வேன்.

தற்போது எமது பத்திரிகையை விமர்சிக்கும் பலர், கலகலப்பு ஆசிரியர்கள் தலைக்குள் ஒன்றுமில்லை என்று கேலி செய்யும் போது, தலைக்கு வெளியே ஆவது ஏதோ இருப்பதாக அமெரிக்கப் பெண்கள் உணர்ந்து கொண்டதையிட்டு பெருமைப்பட்டுக் கொள்வேன். எனது 23வது பிறந்த தினத்தை முன்னிட்டு அதற்கு முன் தினம் 4வது முறையாக அயோவா IOWA என்னும் பகுதியிலுள்ள Buffaloe Centre என்னும் இடத்திலுள்ள சலூனுக்குச் சென்றேன்.

அந்த சலூன் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே இயங்கும். அத்துடன் தலைமயிர் வெட்டுதல் போன்ற வேலைகளுக்கு முன் கூட்டியே தொலைபேசி மூலம் ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். அங்குள்ள சலூன்கள்மாதிரிக்கூட இங்குள்ள சில திலைக் கடைகள் இயங்குவதில்லை என்று எனக்கு பெரும் துன்பயாக இருக்கிறது.

அந்த சலூனில் வேலை செய்து கொண்டிருந்த பாபர் என்னுடன் சுவரஸ்யமாகக் கதைத்துக் கொண்டிருந்தார்.

இங்கே குடியுரிமை முறையில் பாபர்கள் வேலை செய்வதையும் தானியங்கள், வாழைக்குலை போன்ற பொருட்கள் முதலியனவற்றை ஊதியமாக நாம் வழங்கி வருவதையும் பற்றி விளக்கியபோது அவர் அந்த முறை மிகவும் நல்லது என்றும் தானும் இனி, சோயா அவரை சோளம், பால், பட்டர் போன்ற பொருட்களை தனது ஊதியமாக அங்குள்ளவரிடம் பெற முயற்சிக்கப் போவதாக கூறினார்.

அவர்களது நாகரிகத்தை அப்படியே பிடித்துக் கொள்ளும் நம்மவர்களின், சில பாரம்பரிய மரபுகளை கையாள நினைப்பது நமக்கு வேடிக்கைதானே!

மறுநாள் அவ் பாபர் எனது பிறந்த நாளுக்கு கேக் கொண்டு வந்து, என்னை வாழ்த்திச் சென்றார். எங்கள் நாட்டில் வேலையாட்களின் ஏற்றத் தாழ்வுகளையும், போலிக் கௌரவங்களையும் நினைத்து வெட்கப்பட்டேன்!

அந்தப் பிறந்த தினத்திற்கு 100க்கு மேற்பட்ட பிறந்த நாள் வாழ்த்துக்கள் கிடைக்கப் பெற்றேன். ஆனால் அந்த வாழ்த்துக்கள் அனுப்பியவர்கள் பெரும்பாலானவர்களை எனக்கு அறிமுகமில்லாதவர்களே! மேலும் அங்குள்ளவர்கள் பணம், படங்கள், டயறிகள், உடைகள் போன்ற பல்வேறு பொருட்களையும் பரிசாகத் தந்தார்கள்.

ஒரு அன்னிய நாட்டினருக்கு அவர்கள் கொடுத்த மதிப்பையும், கௌரவத்தையும், அன்பையும் எண்ணி மிக மகிழ்ச்சி அடைந்தேன்!

வெளிநாட்டில் தலைமயிர் வெட்டச் செலவு அதிகமாக இருப்பதனால், அதனை மீதப் படுத்தவோ என்றுதான் அவர்கள் சடைவளர்க்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டேன்!

நான் அங்கிருந்தபோதுதான் இருந்த Host Family ஜாக் ஸ்ரெயின் பேர்க், Jack Stein Berg என்ற அக்குடும்பத் தலைவர் ஒரு நாள் சலூனுக்கு சென்றுவிட்டு வாய்க்கு வந்தபடி சலூன்காரரை திட்டிக்கொண்டே வந்தார். விபரம் கேட்டபோது,

''Oh! Crazy பாபர்! எனக்கோ வழுக்கைத் தலை இருக்கும் 7, 8 தலைமயிரினை வெட்டுவதற்குக்கூட 3 டொலர் எடுக்கிறான் எவ்வளவோ மயிர் உள்ள உமக்கு 3 டொலர் எடுக்கிறானே ''என்று கூறிய போது அவரது குழந்தைகளும் நானும் வயிறு குலுங்கச் சிரித்தோம்! அப்போது இலங்கையிலிருந்து கடிதங்கள் பலவும் அன்று வந்திருந்தது. அதில் ஒரு கடிதத்தில் ''எல்லா முதாளைகளையும் தந்தையாகமதி'' எல்லா மூதாட்டிகளையும் தாயாக மதி'' ஆனால் எல்லா கன்னியர்களையும் சகோதரியாக்க எண்ணாதே'' என குறிப்பிட்டு என்னைச் சேர்ந்த ஒரு பெண் வாசகி குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதத்தை நான் அந்தக் குடும்பத்தினருக்கும், விருந்தினருக்கும் வாசித்து காட்டியபோது தமிழர்கள் பண்பாட்டை விளக்கும் அந்த கருத்து அவர்கள் தமிழர்கள் மீது ஒரு குறிப்பான நல்ல கருத்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

பக்கத்து வீட்டிலோர் சோக்கான பெட்டை
பார்த்திடக் கொஞ்சம் இலேசான நெட்டை
வெக்கமோ அவளுக்கு சரியான மொட்டை
வனிதையோ போடுவாள் நெடிமேட்டு பொட்டை

என்வீட்டு வேலியோ எனினும் கட்டை
அவள் போடுவாளே சிறியதோர் சட்டை
கண்இரண்டுமோ பெரும் கோழியின் முட்டை
கன்னியின் பாவாடை பெரும்பாலும் குட்டை !

சாறியே உடுப்பாள் சள்ளைதான் பிதுங்க
சட்டையே அணிவாள் சங்கதி தெரிய
பாறியே பருவம் படுத்திடா திளமை
பக்குவமாகவே தூக்கிச் சுமப்பாள் !

தேப்பனோ மாபெரும் சுருட்டுக் காரன் !
தமையனோ ஐயோ ! கராட்டி வீரன் !
மப்பனே கள்ளைக் குடித்திடும் பேரன் !
மண்டையை உடைப்பதில் தம்பியோர் சூரன் !

தாயார் உடுப்பது சின்னாளம் பட்டு
தனியாக உண்பதோ பத்துக் குழல் புட்டு
வாயாலே பேசி வழங்குவாள் குட்டு,
வதைப்பாளே கணவனை நெருப்பினால் சுட்டு !



நமது சிறி க(வி)தை

அவள்வீட்டு வேலியில் வைத்தேனொரு பொட்டு
அதனூடு சென்றிடும் ஆடு தின்று விட்டு,
அவள் தாயே அடிக்கடி தருவாளே திட்டு
அதனாலே மெலிந்தேன்நான் அவள் கண்கள் பட்டு !

அவளின் அப்பாக்கு இல்லையொரு நட்டு,
அதனாலே அவருக்கு அறிவு சற்று மட்டு,
அவளோ எனக்கென்றும் அழகான சிட்டு,
அதனாலே புகுந்தாளென் இதயத்தைத் தொட்டு !

அவள்மீது எனக்கு என்றுமொரு இது !
ஆசைக்கு இங்கு அளவுதான் எது ?
அவளுக்கு அன்று புரியுமா அது ?
உங்களுக் கிதுவரை தெரியுமா உது ?

மாமரம் மீதினில் ஒரு நாளே ஏறி,
மங்கையை ஒளித்துப் பார்த்தேனே மாறி,
மாமரம் முறிந்து விழுந்ததே பாறி,
மூந்தநாள் மாலை எழுந்தேனே தேறி !

கள்ளமாய் நானே கண்ணை அடிப்பேன்
கனவிலே தோன்றி கரண மடிப்பாள் !
மெள்ளமாய் மசிறி எட்டியே பார்ப்பேன்
மங்கையின் தாயும் பதுங்கியே பார்ப்பாள் !

வேலியில் சறையானை தட்டவே போவேன்
வேலியின் அருகில் பதுங்கியே இருப்பேன்
சமுவிய மீனதன் நீரினைக் கொண்டு
கடிதென என்மீது எத்தியே போவாள் !

மல்லிகா அவளது அழகான பெயரே !
மங்கை யவள்மீது எனக்கு முயிரே !
மழையின்றி இங்கு வாழுமா பயிரே ?
மனதினில் வந்து குவிந்தது துயரே ?

என்நாய்க்கு நான்வைத்த பெயருமோ மல்லி,
இதைக்கேட்டுக் கத்தினள், அவள்தாயார் துள்ளி !
என்வீட்டைச் சபித்தாள் அவள்மண்ணை அள்ளி,
என்வீட்டுக் கோழியை அமுக்குவதில் கள்ளி !

வானொலி பூம்புனல் காலையில் பாடும்,
வனிதையை என்கண்கள் காதலில் தேடும்,
தேனொ பாடலைத் தேப்பனே மூடும்,
திருச்சியைத் திருகியே சங்கீதம் போடும் !

என்மீது அவளுக்கு காதலே இல்லை
என்றாலும் அவள்மீது கோபமோ இல்லை
கண்களைக் கழட்டி எறிந்திட வில்லை
கள்ளமாய் அவளென்னைப் பார்த்தது மில்லை !

# என் காதலி

C. S. பாஸ்கர்

காதலி கண்களே இழுத்திடும் கரண்டு
காளையென் உள்ளமோ கிடந்திடும் புரண்டு
வேதனை, சோதனை ஏங்கினேன் உருண்டு
வேல்விழி மாதுவோ விழவில்லை சுருண்டு !

தலைமயிரைக் கூட சடையாக வளர்த்தேன்
தாடியை மேலும் விட்டுத்தான் பார்த்தேன்
தலையிலே பேனையும் குடியேற்றி வைத்தேன்
தெருவிலே சிகரட்டும் ஸ்ரைலாகக் குடித்தேன் !

பெல்பொட்டம் சிலதையும் மாட்டியே பார்த்தேன்
பெல்லடித்து வீதியில் விசரனாய் நடந்தேன்
கல்காலைத் தடுக்க விழுந்து கரணமடித்தேன்
கல்பல்லை உடைக்க கண்ணீரை வடித்தேன் !

சைக்கில் சீற்றினை உயர்த்தியே வைத்தேன்
சலியாது வேலியை உயர்த்தியே அடைத்தான்
பொக்குவாய்ப் பேரனைக் காக்கா பிடித்தேன்
பொயிலையை வாங்கி டாட்டா கொடுத்தான் !

'பொங்குதே புன்னகை' கத்தியே பாடினேன்
பொங்கியே தேப்பனும் பொல்லுடன் வந்தான்
பொங்கல் வாழ்த்தினை அனுப்பியே வைத்தேன்
போதாத வேளை திரும்பியே பெற்றேன் !

வேண்டினேன் கடவுளை மனமே பதற
வேண்டியே உடைத்தேன் தேங்காய் சிதற !
காண்பேன் தேப்பனை இதயமே உதற
காதலில் துடித்தேன் உள்ளமே கதற !

## மறக்கமுடியுமா ?

தகப்பன்: டேய் ரவி! நேற்று காரை எடுத்துக்கொண்டு எங்கே போனாய்?

மகன்: எனது சினேகிதனொருவனுடன் சினிமாவுக்குப் போனேனப்பா!

தகப்பன்: சரி! சரி! காரிலே உனது நண்பன் லிப்ஸ்ரிக்கையும் காண்ட்பாக்கையும் விட்டுவிட்டுச் சென்றுவிட்டான் கொண்டுபோய் கொடுத்து விட்டு வா!

எஸ். சிவகுமார் 18/1, யாழ் வீதி, யாழ்ப்பாணம்

## இனியவளே !...

ராஜி : ஏண்டி மஞ்சு .. எறும்புகள் பின்னலே போகிறாய்?

மஞ்சு: எங்கள் அம்மா கூப்பன் சீனியை எங்கோ ஒழித்து வைத்துவிட்டா. அதுதான் இந்த எறும்புகள் பின்னலே போய்ப்பார்க்கிறேன்.

க. சண்முகேஸ்வரன் சூராவத்தை, சுன்னாகம்.


உணவுப் பஞ்சம் நீங்கிடத் துணிந்தோம்
உள்ளூரில் பொருள் ஆக்கிட உழைப்போம்

பீப்பிள் ரேட் சப்பளேஸ்
PEOPLE TRADE & SUPPLIES
(கமிசன் ஏஜண்ட்)

நெல் — அரிசி
சிறுதானிய வகைகள்
உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்
விற்பனையாளர்கள்

143, மலிபன் வீதி,
112, 4ம் குறுக்குத் தெரு. கொழும்பு-11
T'Phone: 25389, 23509


## என்காதலி தொடர்

காலையில் ஒரு நாள் பேப்பரைப் படித்தேன்
காதலி வசியம் விளம்பரம் கண்டேன் !
மாலையில் மடலினை எழுதியே போட்டேன்
'மந்திரமாவது' மனதில்ல படித்தேன் !

மணிஓடர் செலவோ நாற்பது ரூபா
மல்லிகா சீதனம் நாற்பதாயிரம் ரூபா !
மணிச் சத்தம் கேட்க நின்றேன் தவித்து
மறுநாள் வந்தது பாசலில் மருந்து !

கோயில் பிரசாதம் வேண்டுதல் போலே
கும்பிட்டு அதனை வாங்கியேன் நானே
வாயில் தேவாரம் பாடியே கொண்டு
விரைவாகப் பாசலை நானுடைத்தேனே !

கரு நிறத் தாளொன்று இருந்தது அங்கே
கவனமாய் விளக்கத்தை படித்தேன் அன்றே
விரும்பிய பெண்ணை வசியம் செய்ய,
வடிவாக மருந்தை கலந்து கொடுத்தாலே,
பறந்தோடி வந்து பக்கத்தில் கிடப்பாள்
படித்தே முடித்து சிந்தனை செய்தேன்,
விரைவாக கண்டோஸ் (ரொபி) வாங்கியேவந்து
வடிவாக உள்ளே மருந்தினைக் கலந்தேன் !

கண்மணி எந்தன் தங்கையை அழைத்து
கன்னியிடம் சேர்க்க சொன்னேன் கொடுத்து
கொண்டு ரொபியை கொடுக்க எடுத்து
கொமிசன் அதற்கு கொடுத்தேன் பத்து !

தனக்கு பிறந்த நாளே என்று
தங்கை பரிசாய் கொடுத்தாள் நன்று
என் கால் முறியப் போகுதே என்று
ஏக்கமுடன் நான் தவித்தேன் அன்று !

இரவு முழுக்க தூக்கம் இல்லை
இமைகள் கூட களைக்க வில்லை
இரவு பூரா முகட்டைப் பார்த்து
இருமிக் கொண்டு கிடந்தேன் களைத்து !

மறுநாள் காலை விடியும் பொழுது
மெதுவாய் பதுங்கி வந்தாள் புகுந்து
கண்ணமடித்து கட்டிலில் விழுந்தேன்
காதலி வந்து பக்கத்தில் கிடந்தாள் !

அந்தோ ! ஐயோ ! என்ன சொல்வேன்
ஆசைக் காதலி யாரெனப் பார்த்தேன் !
வந்த காதலி மல்லிகா அல்ல !
வாலறுந்த அவன் சொறி நாயன்றோ !

மல்லிகா ரொபியை தின்னவே இல்லை
மாறுக அதனை நாய்க்கே போட்டாள்
இல்லாத உணர்வு வசியம் சேர்க்க
என்னிடம் வந்தது நாய்தான் அணைக்க !

[இதில் வரும் பெயர்கள், சம்பவங்கள் உயிருடன் இருப்பவர்களையோ, உயிரற்றவர்களையோ குறிப்பிடுவன அல்ல]


யாழ் ஸ்ரீதரில்
இப்பொழுது பல்லாயிரக் கணக்கான
இரசிகர்களைக் கவர்கின்றாள்

பக்தாத் பேரழகி
(கலர்)
டைரக்ஷன் ராமண்ணா

யாழ் ராணி சினிமாவில்
விரைவில் எதிர்பாருங்கள்
எல்லோரும் நல்லவரே


நீதிபதி:— "நீ குற்றவாளியா? சுற்றவாளியா ?"

திருடன்:— "சுற்றவாளி !"

நீதிபதி:— "முன்பு எப்பவாவது நீ சிறைக்குப் போயிருக்கின்றாயா ?"

திருடன்:— "இல்லை! இதுதான் நான் முதல் தடவை திருடியது !"

ஜே. பி.

மகள்:— "அப்பா நான் குரங்கில் இருந்தா பிறந்தேன் ?"

அப்பா:- தம்பி உன் அம்மாவின் பரம்பரையை என்றுமே நான் பார்க்கவில்லை !

ஜே. பி.

பரிசுக் கவிதை



## தவறு மினி தவிர்த்த தென்றீர்!

கலகலப்பு இதழினிலே
கன்னியர்கள் மனமெல்லாம்
வெலவெலக்கக் கவி புனையும்
வேலையற்ற காதலரே ?

குறையுடுப்புத் தனையே நீர்
குறை கூறி எழுதிய தால்
நிறையுடுப் புடுத்தங்கு
நானன்று வந்த போது,

உடையதனை நீர் பார்த்து
'உம்' மென்று முகம் வைத்தீர்!
விடையேதும் காணாது
விழித் தங்கு நான் நின்றேன்!

கடைசியாய் நானோக்க முடன்
கலங்கியே கேட்டதற்கு
தொடை காணா குறையென்றீர்,
தவறுகளில் தவிர்த்த தென்றீர்!

மங்கையர்கள் தொந்தியின்று
மறைக்காமல் தெரிய தென்று
தங்களது கவிகண்டேன் !
தவறினைத் திருத்தி வந்தேன் !

எங்கெதையோ தேடிய நீர்,
ஏக்க முடன் எனைப் பார்த்தீர்,
தங்களது தவிப் பென்ன ?
தாங்காது நான் கேட்டேன் ?

இடை தெரியாக் குறையென்று
இனியவரே பதில் தந்தீர் !
மடைச்சி! நானெழுது வது
மற்றவர்க்குத் தானென்றீர்!

கன்னியர்கள் பற்றி இனி
கவிதைகள் வேண்டாமென்
றேன் !
கண்டபடி எழுதா விட்டால்
கண்ணே! செழிக்காது! என்றீர்!

என்றும் உங்கள்
காதலி

[இக் கவிதைக்கான பரிசினை பெறுபவர் கலகலப்புடன் தொடர்பு கொள்ளவும்[ .

## சடையை சொல்லிக் குற்றமில்லை !
## 'சைட்பேன்ஸ்'சை சொல்லிக் குற்றமில்லை !
## கடவுள் செய்த குற்றமெடி!

விஞ்ஞானம் வளர்ந்த இன்றைய உலகினிலே இளைஞர்கள் செய்த பெரும் ஆராய்ச்சியின் மாபெரும் கண்டுபிடிப்புத்தான் தலைமயிர் வளர்த்தலும் கன்னத் தூண் நாட்டலும் !

ஏன் அவர்கள் இவற்றினை செய்கின்றார்கள்? OH! காரணமில்லாமல் இருக்குமா?

விலங்கினங்களில் பெண் விலங்கை கவர்தலுக்காக ஆண் விலங்கில் கவர்ச்சி தரும் வகையினில் ஏதாவது உண்டு.

உதாரணமாக மயிலில் ஆண் மயிலுக்குத்தான் தோகையுண்டு மானில் ஆண் மானுக்குத்தான் கொம்புண்டு! சிங்கத்திலும் ஆண் சிங்கத்திற்குத்தான் பிடரிமயிருண்டு. ஆனால் ......... இந்த இளைஞர்களுக்கு மட்டும் ......

இது ஆண்டவனின் பெரும் பிழையல்லவா ?

என்றாலும் அறிவினால் எதனையும் சாதிக்கும் நம் காளையர்களா சகித்துக் கொள்வார்கள் ! சந்திதனில் நிற்கும் போதெல்லாம் சிந்தித்துப் பார்த்தார்கள்!

ஆம்! அந்த அற்புதக் கண்டுபிடிப்புத்தான் அவர்களின் இன்றைய கோலம்.

எனவே, தலைமயிர் வளர்ப்பதும், சைட்பேன்ஸ் வைப்பதும் குற்றமா? இல்லை! இயற்கை செய்த தவறினை செயற்கையால் குறை தீர்த்து மனமகிழ்வு காணும் காளைகளை அவர்கள் பணி தொடர்ந்து வெற்றி காண வாழ்த்துகிறோம் !

காளைகளின் சடையிலும்
சைட்பேன்ஸிலும் சுருண்ட
கன்னிகள் !



## தவறு !

— கவியரசு —
(கண்ணதாசன்)

கணவனும் மனைவியும் மஞ்சத்தில் படுத்திருந்தார்கள் அவர்களது குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் தாங்கள் ஒருவரை ஒருவர் காதலித்ததையும், தகப்பனைக் கண்டு ஒளிந்துத் திரிந்ததையும், கடிதங்களை எழுதி குவித்ததையும் பற்றிப் பேசிவிட்டு, பின்பு அவர்கள் தமது வீட்டுப் பிரச்சனைகளைப் பற்றிப் பேசினார்கள். அந்தப் பால்காரனிடம் பால் வாங்கியது தவறு! இந்த வீட்டுக்கு நீலப் பெயின்ற் பூசியது தவறு! அந்த நிலம் வாங்கியது தவறு என்று ஒவ்வொரு தவறையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

தூங்கிக் கொண்டிருந்த குழந்தை திடீரென்று எழுந்து,

'சும்மா தூங்குங்களேன் : ஏன் 'தொண தொண' வென்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் செய்த எல்லாமே தவறுதான் : நானும் அதில் ஒரு பகுதிதானே !''

என்று கூறிவிட்டு மறுபடியும் படுத்துத் தூங்க ஆரம்பித்தது.

கணவனும் மனைவியும் சுருண்டு போனார்கள்.

செல்வி A.Y. வதி
கரம்பொன்

※ பெண்கள் சம உரிமை கோருவது பற்றி தங்கள் கருத்தென்ன?

1வது பரிசு!

۞ சம உரிமை கேட்பது பரவாயில்லை சிலவேளைகளில் ஆணின் முழு உரிமையையே பறித்து விடுகிறார்களே!

T. குகதாசன், சாடியடு,
ஏழாலை.

※ ஹலோ தீசன், மாப்பிள்ளைக்கு சீதனம் கொடுத்து பெண்ணையும் கொடுக்கிறார்களே ஏன்?

۞ கொடுத்த பணம் செலவழிய வேண்டாமா?

அற்ற சாறியுடன் கூடிய ஒரிஜினல் தமிழ் பெண்ணையே 'கலகலப்பு' விரும்புகிறது.

A. வெங்கடேஸ்வரன்
நீர்வேலி

※ காதலில் தோல்வியுற்றவன் அதிர்ஷ்டசாலியா வெற்றி பெற்றவன் அதிர்ஷ்டசாலியா?

۞ தோல்வியுற்றவன்தான் காதலித்த பெண்ணை மணந்து கொண்டால், தன் அழகில் மயங்கித்தான் தன்னை திருமணம் செய்துகொண்டாள் என்ற சுய கர்வம் பெண்ணுக்கு வந்துவிடுகிறது. இதனால் ஆண் தனது சுய கௌரவத்தையே இழந்து விடுவதுண்டு.

செல்வன் சசிதாஸ்
335, பத்தகோளவத்தை,
கழனி

※ மதுவிற்கும் மாதுவிற்கும் உள்ள வேறுபாடு என்ன? 2வது பரிசு

۞ சுவைத்தால் குறிப்பிட்ட நேரத்திற்கு போதை தருவது மது! சுவைக்காமலே காலமெல்லாம் போதை தருவது மாது? (இது என் அனுபவமல்ல)

எஸ். பரம்பொருள்
மட்டுவில் வடக்கு

※ இன்றைய ஆண்களையும் பெண்களையும் வித்தியாசம் காண்பது எப்படி?

۞ ஐயோ! பரம்பொருளே தங்களுக்குத் தெரியாததொன்றா? அடியேனை இப்படிக் கேட்கலாமா?

நாதன், உரும்பராய்

※ மொட்டைக் கடிதங்களைப்பற்றி?

۞ விபரமில்லாத கடிதங்கள், மூளையில்லாத மண்டை போன்றவை. நிலவைப்பார்த்து நாய் குலைப்பதில்லையா? காகம்திட்டி மாடு சாவதில்லையோ... கதைகள் தான்! ஐயோ! பாவம்;

செல்வி நேசம் இராசையா
70, மல்லாகம்

※ சில ஆண்கள் பெண்களைக் கண்டதும் தங்கள் தலையைத் தடவுவதேன்.

۞ பெண்களின் தலையைத் தடவ முடியும்! எனவே தான்

இராஜாஜீ [illegible]ந்துவில்
கிழக்கு

※ பிறருக்காகப் பரீட்சை எழுதும் மாணவர்களைப் பற்றி?

۞ நன்மை செய்[illegible] நினைத்து [illegible] குறுக்கு வழியில் அவன் வாழ்வை சீரழிப்பவர்கள்

ஆர். நிரஞ்சனி
பிரவுண்வீதி, யாழ்.

※ காதல் எப்போது ஆரம்பமாகும்?

۞ இதேபோன்ற உதவாத கேள்விகளில் போதே ஆரம்பிக்கலாம்.

எஸ். எஸ். குமார்
[illegible], [illegible]ன்

※ [illegible] எப்படி இருக்கிறது?

۞ [illegible]! தங்களைப் பிரிந்து துயரில் சமி[illegible] [illegible] உடனே [illegible] பார்சலாக அனுப்பி[illegible]

ஜே. பி. மருதனார்மடம்

※ காதலிக்கு காதலனைக் கண்டதும் டிக், டிக் என்று இதயம் அடிப்பதேன்

۞ எதையாவது [illegible] போகிறானோ என்றுதானே

எஸ். செல்வராசா [illegible]லை

※ அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு இல்லாதவள் பெண்களுக்கு அழகு என்கிறேன் நான்! [illegible] என்று மறுக்கிறீர்களே நீங்கள்?

۞ ஸ் ஸ்

# உங்கள் கேள்விகளும்

சி. சிவனேசன் உடுவில்

※ அமெரிக்காவில் யாரோ பெண்ணுடன் திரிந்தீராமே, உண்மையா?

۞ ஆயிரமாயிரம் இளம் யுவதிகளுடன் திரிந்ததில் யாரென்று தெரியவில்லை

※ கலகலப்பில் வசந்தி என்ற பெயர் அடிக்கடி வருவதன் காரணமென்ன?

۞ அப்பெயரைக் கண்டதும் தாங்கள் துள்ளி யெழுவதேன்! ஒருவேளை தங்களது...!

செல்வி கு. சரஸ்வதி
217/7, கடையிற்சுவாமி வீதி, யாழ்ப்பாணம்

※ தீசனரே உமக்கு வரப்போகும் பெண் எப்படிப் பட்டவராக இருக்க வேண்டும்? 3வது பரிசு)

۞ மினி, ஜுங்கி, பெல்ஸ் மக்ஸி, ஐடெக்ஸ், கியூ ரெக்ஸ் போன்றவை

செல்வி ந. மதி,
இத்திரசெல்வம்
பெருமாக்கடவை,
அளவெட்டி.

※ ஆண்கள் காதலிக்க ஆரம்பிக்கும்போது அன்பே! ஆருயிரே என்று விட்டு பின்னர் அவர்களை ஏமாற்றுவது ஏனோ?

۞ பெண்கள் மட்டும்என்ன காபன்பிரதிகள் வைத்து காதல் கடிதம் எழுதி பலரிடம் கொடுப்பதும் அழகு சாதனங்களைப் பலரிடம் வாங்கி ஏமாற்றுவதும் நாம் அறியாததல்லவே... காதலிகளே காதகிகளாக மாறும்போது...

K. இராசரட்ணம்
அல்வாய்

※ மூத்தவர் பிள்ளையார் இருக்க தம்பி முருகன் இருவரை மணந்ததேன்?

۞ பரவாயில்லை. உங்கள் அண்ணரைப்பற்றி கவலை வேண்டாம் நீர் விரும்பினால் ...... (ராசரட்ணத்தின் அண்ணர் மன்னிப்பீராக)

# உதவாத பதில்களும்

அடுத்த இதழ் பரிசுத் தொகை
15/- 10/- 5/-
கூப்பனின்றி வருபவை ஏற்கப்படமாட்டா.
தபாலட்டையில் மாத்திரம் 3 கேள்விகள் அனுப்பலாம்

உதவாத கேள்விகள்
'கலகலப்பு'
இணுவில்

அன்று சொர்க்கத்தின் வாசலில் ஒரே சனம்! முகப்பில் ஆசனத்தின் மீது அமர்ந்திருந்தார் சொர்க்கத்தின் பிரதம உத்தியோகத்தர். அவருக்கு அண்மையில் சில உதவியாளர்களும், இலிகிதர்களும் பரபரப்புடன் கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். சொர்க்கத்தின் வாயில் கதவு சாத்தப்பட்டு அங்கு ஒரு காவலாளியும் நின்று கொண்டிருந்தான்!

சொர்க்கத்தில் புகுந்து கொள்வதற்காக மனிதர்களெனப்படும் ஜீவராசிகள் 'கியூ' வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

வரிசையிலே முதலாக நின்றவரை நோக்கி அந்த அதிகாரி ''உமது பெயர்?''

மனிதன்: ''கணேசன்''

அதி: ''திருமணமானவரா?''

கணேசன்: ''ஆம் ஐயா!''

அதி: ''ஓ... வாழ்க்கையில் நன்ருகவே நீ கஸ்டப்பட்டிருப்பாய்! எனவே உன்னை சொர்க்கத்திற்கு செல்வதற்கு அனுமதியளிக்கின்றேன். காவலா! இவரை உள்ளே விடு''

(அந்த மனிதர் உள்ளே சென்றதும்)

அதி: ''அடுத்தாள். உமது பெயரென்ன?''

அவர்: ''நாதன்''

அதி: ''நீர் திருமணம் செய்தவரா?''

நாதன்: ''ஆம்: இரண்டு தரம்! இரு மனைவிமார்!''

அதி: ஆ! நாங்கள் முட்டாள்களை சொர்க்கத்திற்குள் அனுமதிப்பதில்லை! நீர் திரும்பிப் போகலாம்''

நாதன்: ''இந்தாருங்கள் எனது அன்பளிப்பு [தயக்கத்துடன்]

(அவர் கொடுத்த உறையை வாங்கிப் பார்த்த அதிகாரி)

அதி: ''ஆ! இலஞ்சமா தருகின்ருய்! இது என்ன பூலோகம் என்ற நினைப்பா! யாரங்கே! இவனை நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்''

(காவலாளி வேருெருவன் வந்து அவனை இழுத்துச் செல்கின்ருன்)

அதி: ''மற்ருள் யார்? நீயா? என்ன பெயர்? ஊரென்ன?''

மனிதன்: ''என் பெயர் மூர்த்தி, ஊர்—மருதனுர் மடம்!''

அதி: ''பிரதம இலிகிதரே! இது எந்த பைல் (File) புதிதாக இருக்கிறதே!''

இலி: இது சிவராத்திரி அனுமதிக்கான பைல் (File)''

அதி: அப்படியா! மூர்த்தி அவர்களே! நீர் சிவராத்திரியின் போது விழித்திருக்கிறீரா? உமது பெயர் இந்த பைலில் இருக்கிறதே!''

மூர்த்தி: ஆம் ஐயா! என் காதலியை எண்ணி, எண்ணி ஏங்கியதால் அந்த சிவன் இராத்திரி முழுவதும் நான் தூங்கவே இல்லை!''

அதி: ''ஓ...ஓ... அப்படியானுல் உம்மை எப்படி அனுமதிப்பது?

சொர்க்கத்தின் உத்தியோக நண்பர்களே! இது நமக்கெல்லாம் பெரும் பிரச்சனையாக இருக்கிறதே!''

# சொர்க்கத்திலும் ஹவுஸ் புல்

C. S. பாஸ்கர்

ஒரு உத்தியோகஸ்தர்: ''இதில் என்ன பிரச்சனை இருக்கிறது? சிவராத்திரி தினத்திலே எப்படி விழித்திருந்தாலும் அவரை சொர்க்கத்தில் அனுமதிக்க வேண்டும் என்பது மேலிடத்தின் கட்டளை, மேலும் சிவபெருமானின் உத்தரவும்கூட!''

அதிகாரி: ஓ... நான் மறந்து விட்டேன்! அப்படியானுல் இதோ, சிவராத்திரியின் போது விழித்துக் கொண்டவர்கள் பலரின் பெயர் பட்டியல்கள் அதிகமாக இந்த பைலில் (File) இருக்கின்றனவே! பரவாயில்லை சமாளித்துப் பார்ப்போம். சிவராத்திரியின் போது நித்திரை தவிர்த்து விழித்திருந்தவர்கள், ஒரு புறமாக வாருங்கள்''

(பல மனிதர்கள் தமக்கே உரிய இயல்பான பாணியில் முண்டியடித்தனர்)



அதி: சரி! ஒவ்வொருவராகக் கூறுங்கள்? ''நீங்கள் ஏன் அன்று தூங்கவில்லை என்று! அங்கே இடிபடாதீர்கள்! ஒருவரையும் உள்ளேவிட மாட்டோம்! அமைதியாக இருந்தால்தான் அனுமதி தருவோம்! சரியா! சொல்லுங்கோ!''

ஒருவர்: ''ஐயா! அன்று மூன்று காட்சிகளும் படம் பார்த்தேன். ஒன்று காதலிக்க நேரமில்லை, இரண்டாவது ஹெல்கா (Helga) மூன்ருவது சிவகாமியின் செல்வன்!

மற்றவர்: ''களவெடுத்துத் திரிந்ததால் அன்று தூங்கவில்லை சிவராத்திரியானதினுல் கோயிலில் பக்தர்கள் இல்லை. இரண்டு விக்கிரகம் உட்பட திருடினேன்!''

(தொடர்ச்சி 11—ம் பக்கம் பார்க்க)

★ அக்கரை பார்த்த மாடு மேயாது! அக்கம் பார்த்த பெண் தகாது ★



## இராமாயண இரசாயனம்

ஆக்கியோன் தரன்

★ இராமரின் கால் பட்டு கல் பெண்ணானமை !
❁ இரசாயன மாற்றம் ❁

★ சீதையை இராமா மணந்தமை !
❁ பௌதீக மாற்றம் ❁

★ காடு சென்றமை !
❁ மின் இரசாயன அரிப்பு ❁

★ இராவணன் சீதையைக் கவர்ந்தமை !
❁ தாக்க வீதத் தொடரில் இராவணன் சீதைக்கு மேலாகக் காணப்பட்டமை ❁

★ இராமர் சீதையைப் பிரிந்தமை !
❁ மீளுந் தாக்கம் ❁

★ அனுமான் சீதையைத் தேடிச் சென்றமை !
❁ இலத்திரன்ஓட்டம் நேர் முனைவிலிருந்து எதிர் முனைக்குச் செல்லும் ❁

★ இலங்கையில் போர் நடந்தமை !
❁ எகுத்தராக்கம் ❁

★ சீதையை மீட்டமை !
❁ இரட்டை இடப்பெயர்ச்சி ❁

★ சீதையை மீண்டும் காடு அனுப்பியமை
❁ பிரதியீட்டுத் தாக்கம் ❁

★ சீதை மீண்டும் அழைக்கபபட்டமை ❁
❁ சீதை + அக்கினி—தாக்கம் நடைபெருமை ❁

---

### சரியா? தப்பா?

கன்னி:- என்னது? நீ என்ன குருடா?

காளை:- நான் குருடனாக இருந்தால் இப்படி உன் மீது சரியாக வந்து இடித்திருப்பேனா?

K. சிவராசா நாகர் கோயில்

---

### ஸ்கூல் மாஸ்டர்

சச்சி:— டேய், இன்று மாலை எனது பிறந்த தின விழாவிற்கு நீ வரவேண்டும். !

ஆனந்:— ''வெரி சொரி இன்று மாலை நான் ஸ்கூல் மாஸ்டரைப் பார்க்க போகிறேன்''

சச்சி:— ''பரவாயில்லை. முடிந்தால் அவரையும் விழாவிற்கு அழைத்துவா !''

★ ஜே. பி.

---

ஒருவர்:— பஸ்ஸினுள்ளே பெண்கள் நிற்பதை பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார் அவர்

மற்றவர்:— அப்படியா ! உடனே எழுந்து தனது இடத்தைக் கொடுத்து விடுவாரா?

ஒருவர்:— இல்லை கண்ணை மூடிக்கொண்டு இருப்பார் !''

❁ ஜே. பி. ❁

---

பாடசாலை மாணவ மாணவிகள்
நவநாகரீக காளை கன்னியர் அனைவருக்கும்
காலத்திற் கொப்ப சிறந்த உயர்ந்த
பாதணிகளுக்கு மிகவும் பிரசித்தி பெற்றவர்கள்
★ நாதன்ஸ் ★
NATHANS
மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம்

---

## ஆண் பிள்ளை என்றால் ஆறு கரண மடிப்பார்

— இணுவையூர் பாஸ்கர்

என்னவர், நல்லவர்,
எனக் கென்று முரியவர் !
என்றாலும் தொல்லைகள்
என்னாளும் தருபவர்

++

மாலையிலே 'டார்லிங் கென்பர்'
மதிமுகமே! மலரென்பர்!
காலையிலே, கழுதையென்பார்
கண்டறியாக் காதலென்பார் !

++

அம்மா வீட்டில் இருந்தால்
அடங்கிப் போயிருப்பார்
சும்மா என்னை சுற்றிவந்து
'சுவீட்டி' என்றழைப்பார் !

++

நகை வேண்டு மென்றால்,
நாய் போலக் குலைப்பார் !
நகைச் சுவையும் புரிவார்,
நள்ளிரவு வந்தால் !

++

படம் பார்க்க என்றால்
பாம் பாகச் சீறுவார் !
விடன் என்று சொன்னால்,
விழுந்து காலில் கெஞ்சுவார் !

++

அத்தான் போது மென்றால்
ஆசை தீரா தென்பார் !
கொத்தான் வேணு மென்றால்
'கொடு முத்தம்' என்பார் !

++

மாங்காய் கேட்டு விட்டால்,
மயக்கம் வருகிது என்பார் !
தாங்கா தென்று கூறி
தலையிற் கையை வைப்பார் !

++

எத்திக் காட்டி, ஏதோ கூறி,
ஏமாத்தி அழைப் பார் !
பத்திரமாய் பெற்று விட,
பரதேசி என்பார் !

++

ஆண் பிள்ளை என்றால்,
ஆறுகரண மடிப்பார் !
பெண்ணொன்று கண்டால்,
படுத்துச் சுருண்டு விடுவார் !

---

✱ மிரட்டிக்கொண்டு போவது ஆண்களின் இயல்பு, ஆதரவுடன் அழைப்பது பெண்களின் தன்மை ✱

S. K. Theesan



# வட்டு எம் பியும் சுட்ட தீசனும்

— கலகலப்பான ஓர் சந்திப்பு —

நண்பகல் நேரம் யாழ்கச்சேரியில் மேல்மாடியில் சென்றுகொண்டிருந்தேன் அரசியல் அதிகாரி என பெயர் பொறிக்கப்பட்ட அறை அண்மையில் சென்று கொண்டிருந்தேன் பலமுறை கேள்விப்பட்ட, ஆனால் பார்க்காதமுகம், எனது கையில் கலகலப்பு (File) பைலும் சில கலகலப்பு பிரதிகளும் இருந்தன மனத்தில் ஏதோ திடீர் துணிவு உந்த அறையினுள் நுழைந்தேன் அவர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அவர் வேறுயாருமல்ல இலங்கையிலேயே கலகலப்பைப்பற்றி பேசுமளவிற்கு துப்பாக்கிசூட்டு சம்பவ இலக்கான வட்டுக்கோட்டை தேசியப்பேரவைப் பிரதிநிதி திரு. தியாகராஜா எம். பி அவர்கள். அவர் மேசையில் 2 கலகலப்பு பிரதிகளையும் வைத்தேன் அத்துடன், துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் வீணாக நாம் பிரச்சினைக்குள்ளாக்கியதையும் விளக்கினேன் 2 கலகலப்பு பிரதிகளுக்கு 1 ரூபாவை எடுத்து தந்தார். தாங்யூ சார். நான் எனது கையால் பிரதிகள் விற்பனை செய்வதில்லை இது என் அன்பளிப்பு என்றேன், மிகவும் கலகலப்பாக இருக்கிறது என்றார், தற்பொழுது என்ன செய்கிறீர் எனக் கேட்டார். எனது பத்திரிகை தொழில் பற்றியும் விவசாய கழக முயற்சிகள் பற்றியும் குறிப்பிட்டேன். உடனே அவர் வார இறுதியில் தொல்புரம் A.P.C. க்கு கீழுள்ள பகுதி இளம் விவசாயிகளுக்கு காணி வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று நடைபெறஇருப்பதாகவும் அங்கு வந்து இளம் விவசாயிகளுக்கு கழக முயற்சிகளையும், திட்டங்களையும் விளக்குமாறு கூறினார் காணி பெறுவதற்காக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சூழ்மியிருந்தனர்; எத்தனையோ பெரியவர்கள் அங்கிருந்தபோதும் என்னைத் தன்னருகே அழைத்து இருத்தினார். எனது அமெரிக்க அனுபவம், உள்ளூர், வெளியூர் மாற்று திட்டங்கள் பற்றி நான் விளக்கினேன்.

இடையே என்னோடு கதைத்த அவர் கலகலப்பு பொங்கல் இதழில் வெளியான ராசிபலன் எனது வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் வாசித்து ரசித்தோம் ருசித்தோம், என்றார். எம். பி. அவர்கள் நன்றி கூறிவிட்டு திரும்பினேன் நான்.

---

**நளினி** ஏண்டி சரோ! இங்கிலாந்திலிருந்து உன் கணவன் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறார்?

**சரோ** 'என்னைப்பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லை 'அண்ணா கோப்பி' மட்டும் வாங்கி அனுப்பச்சொல்லி எழுதி இருக்கிறார். என்னைவிட அவருக்கு அண்ணா கோப்பியில்தான் விருப்பம் போலும்!

நீங்களும் வாங்கிப் பாவியுங்கள்!

**'அண்ணா கோப்பி'**

4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

---

**மகன்** 'அம்மா! நான் கடலில் குளிக்கப் போகிறேன்.

**அம்மா** ''வேண்டாம் கடல் சரியான ஆழமப்பா''

**மகன்** ''அப்ப, அப்பா மட்டும் குளிக்கப் போகிறாரே''!

**அம்மா** ''ஓம், அவர் தன்னை இன்சூர் செய்திருக்கிறார் தானே'

★ ஜே. பி. ★

---

சிறந்த முறையில் கல்வி பயில,

**'பரிங்ரன் கல்வி நிலையம்'**

கே.கே. எஸ். வீதி, சுன்னாகம்

---

## ★ ஏனோ? ★

வாசுகி — அச்சுவேலி

யுத்தம் புது நாரீகம் என்ற பேரில்
புனைகின்ற கோலங்கள் எத்தனையோ.
மொத்தமாய் உடல்காட்ட முனைந்து பின்னர்
மொட்டவிழும் பருவமதைத் தெரியவைத்து
எத்தனையோ சுந்தரிகள் இன்று லகில்
'இங்கிலீசு' நாகரீகம் என்று சொல்வார்
சொத்தனைய எங்களது கலாச்சாரம்
சோரம் போகுமிழி நிலையுமின்று ஏனோ?

அரைமுழுமாம் முழங்காலின் மேலே ஏற
அரையார் உடையதனை அரையி லேற்றி
கரையதனில் 'றேந்தை' தனை ஒட்ட வைத்து
கன்னியர்தம் உள்ளாடை வெளியே காட்ட
அரையங்குல உயரமதில் உடை தரித்து
அலைகின்ற கன்னியர்கள் கோலமெல்லாம்
விரைவாக அழிவதனை தந்து செல்லும்
வேற்றுடமை நாகரீக விருப்புமேனோ?

விரலெங்கும் சிவப்பாலே நிறமுந்தீட்டி
விழியோரம் வழிகின்ற மையுந்தேக்கி
தெருவாலே போகின்ற வேளை எல்லாம்
தெரிகின்ற உடலதனை குலுக்கி மினுக்கி
எரிகின்ற செந்தழல் போலித மெங்கும்
எத்தனையோ படைபடையால் 'ஓனோ அப்பி,
புரியாது காலமதை வீணே போக்கும்
பெண்ணே உன் சித்தமதில் கலக்கமேனோ?

# இதோ வந்துவிட்டது?

## அதற்கு ஒரு விமர்சனம்

[வீதிகளில் இருந்து விமர்சனம் எடுத்தவர்]

- S.K. தீசன்

வீதிகளில், வீடுகளில் G.C.E., N C.G.E. எடுத்த மாணவர்களை காண்பது மிகவும் அரிது. பரீட்சையில் சித்தியடைந்தவர்களோ! யாராவது ரீற்கேட்டாலும் என எண்ணி ஒழிக்கின்றார்கள். பெயிலானவர்களோ? ரிசல்ட் சொல்ல வெட்கத்தில் ஒழிக்கின்றார்கள்,

சில வீடுகளில் N.C.G.E. மாணவர்களின் C, D க்களைக் கேட்டு பெற்றோர் மிகவும் மகிழ்கிறார்கள் சந்தோசத்தில் 50, 100, ரூபாவை கொடுத்துள்ளனர் இப்பொழுது தான் C,Dக்களைப் பற்றி புரிந்துள்ளனர்.

போக்குவரத்து ஸ்ரைக் நடந்தும் தியேட்டர்களில்மாணவர் குளாம் குறையவில்லை, குதிரையோடியவர்கள்பாடு சொல்லத்தேவையில்லை சில குதிரைகள் சறுக்கிவிட்டன சில குதிரைகள் தலைமறைவாகியுள்ளன, குறிப்பிட்டதைவிட ஒரு பாடம் திறமை சித்தி கிடைத்ததாக குதிரையொன்று மேலதிக பணம் கேட்கிறதாம்,அடுத்தவகுப்பு சித்திரை மாதம் தானே! ஒரு பிக்னிக், படங்கள் தவறவிடமாட்டோம் என வீதியில் செல்லும்போது மாணவியொருவர் கூறியது காதில் கேட்கிறது சுமதி பாவமப்மா, 2 பாடம்தான் சுமதியின்றையவ்வர் கேள்விப்பேப்பர் குடுத்தும் பயனில்லை.

உனக்கு விடியவெள்ளனை முட்டைக் கோப்பியெல்லே அடிச்சுத்தந்தனான் என்ன பயன் ஒருதாய் மகளைக் கேட்பது வீதியில் போகும் எனது காதில் விழுந்தது.

'கடவுள் இல்லை இரவு பகலாக தேவாரம் திருவாசகம் படித்து விரதம் பிடித்து என்ன பயன் நான் சமயம் பெயில்

# ராசி பலன்



கண்டபடி கணித்தவர்

— டோ —

* மகரம் : அடுத்த பரீட்சைக்கு 10 மாதங்கள் உள்ளன கவனமாகப் படிக்கவும்.

* கும்பம் : N.H.S.C. படிக்க விரும்புகிறாய் C போதாது ஒழுங்காகப் படிக்கவும் சினிமாவைக குறைக்கவும்

* மீனம் : காதலி பரீட்சையில் தோல்வியென கவலைப் படாதே அடுத்த பரீட்சை மண்டபத்தில் சந்திக்கலாம்.

* மேடம் : குதிரையை நம்பி பணம் கொடாதே! காலை இடறும்.

* விருச்சிகம் : தபால் சேவை இல்லை காதலனின் கடிதம் வராது தொலைபேசியில் பேசுவது நலம்.

* மிதுனம் : மெயில் வண்டியில் பிரயாணம் செய்யாதே

என சினேகிதியுடன் வாதாடினார் பஸ்நிலையத்தின் ஒரு மாணவி தோல்விதான் வெற்றியின் முதல்படி வாடா மச்சான் படத்திற்கு மற்றவர்களையும் திரட்டிக் கொண்டு செல்கிறான் ஒரு மாணவன், மனக்குதிரையை கட்டுப்படுத்தியபடி வீடு திரும்புகிறேன் நான்

(மாணவ மாணவிகளே! மன்னிப்பீர்களா? (க)

பலமைல் நடக்க வேண்டி வரும்.

* கடகம் : சிறந்த முறையில் பரீட்சை சித்தியெய்தியுள்ளாய் (ஆனால் உன் அறிவு போதாது)

* சிம்மம் : பரீட்சை முடிவு சரியில்லை குடியேற்றத் திட்டத்தின்கீழ் காணிக்கு விண்ணப்பிக்கவும்.

மீதி ராசிக் காரருக்கு, டிசம்பரின் பின் நல்ல காலம்.

இது கணித்தவருக்கு கஷ்டகாலம்.


இளமையிற் கல்வி
சிலையில் எழுத்து
சிறந்த கல்வி நிறைந்த பயன்
சரஸ்வதி கல்வி நிலையம்
உடுவில்
G.C.E. N.C.G.E. பாடங்கள்
போதனை நடைபெறும்.

இளைஞர்கள் ஊக்கமதால்
இலங்கைவளம் பெருகிடுமே!
உள்ளூர் விளை பொருளை
நல்விலையில் விற்றிடவே
நாடுவீர்
சி. ஆறுமுகம் & பிறதர்ஸ்
(கமிஷன் ஏஜன்ட்)
104, 4ம் குறுக்குத் தெரு.
கொழும்பு - 11
தொலைபேசி: 29833

வெகு விரைவில் எதிர்பாருங்கள்
தன ராசியும்
தமிழ்ப் பாடமும்
மகரராசி மஞ்சுளா
மனையியல் பாஸ்
உண்மைக் கதை (அல்ல)


மிகவிரைவில் நண்பர்களைப் பெற்றுக்கொண்டே போகிறவன் அதிவிரைவில் அவர்களை இழந்துகொண்டே போவான்

# இளம் விவசாயிகள்
## YFF ஒன்றியம் YFF
## YOUNG FARMERS FEDERATION

யாழ் மாவட்டத்திலுள்ள மூன்மாதிரிக் கழகங்கள் பல சேர்ந்து யாழ் சன்மார்க்க வித்தியாசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

9—35 வயதெல்லை கொண்டவர்கள் அங்கத்துவம் வகிக்கும் மேற்படி ஒன்றியம் பௌர்ணமி தினங்களில் ஒன்றிய விழாக்களை கழகங்கள் அமைந்துள்ள இடங்களில் நடாத்தவும் கூடிய மாணவர்களுக்கு. கழக முயற்சிகளை அளிக்கவும் கல்வி வசதிகளை அளிக்கவும் சமூக சேவை, சிரமதானம் உள்ளூர் வெளியூர் மாற்றுத் திட்டமூலம் பயிற்சிகள் பெறவும் பல திட்டங்களைத் தீட்டியுள்ளது.

—۞— —۞—

இதுவரையில்

1ம் ஒன்றிய பௌர்ணமி விழா

இணுவில் ஜோதி இளம் விவசாயிகள் கழகத்தினர், இராமநாதன் மகளிர் கல்லூரியிலும்

2வது விழா

கொக்குவில் இந்துக்கல்லூரியில் திருவள்ளுவர் இளம் விசாய கழகம் (கொக்குவில்) திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகமும் இணைந்து நடாத்தின.

3வது விழா

மானிப்பாய் இந்துக் கல்லூரியில், பரிஷ் இளம் விவசாய கழகத்தினராலும்

4வது விழா

அமெரிக்க 4H கழக பிரதிநிதியாக செல்வன் பற்றிக் அவர்களை வரவேற்று ஒரு சிறப்பு விழாவாக நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையிலும்.

5வது விழா

கரம்பொன் விஜேபாஜி இளம் விவசாயிகள் கழகத்தினரால் கரம்பொன் கிறியபுஷ்ப மகளிர் கல்லூரியில் (15—2—76 ல்) பல்சுவை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. மில்க்வைற் அதிபர் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்து பல நூல்களையும் அன்பளிப்பு செய்தார் ஒன்றிய விழாக்களுக்கு இவர் இதே போன்ற உதவிகள் வழங்கியுமுள்ளார்.

பாடசாலை அதிபர் சகோதரி கார்மலீற்று இளைஞர்கள் கட்டுப்பாட்டுக்குள் அமைந்துள்ளது சிறப்பானது எனக்குறிப்பிட்டார்

சாய போதனாசிரியர் சிவானந்தம் கோழி வளர்ப்பு, முயல்வளர்ப்பு பற்றி சிறப்பாக கருத்துரை வழங்கினார்.

இளம் விவசாய கழகங்கள் சிறுவர்கள் மாணவர்களுக்கு தேவையான கல்விவசதியளிக்கவேண்டுமெனவும் ஆண்பெண்கள் எமது கழகத்தில் கட்டுப்பாட்டுடன் இருப்பது மிகவும் பெருமைப்பட கூடியது என தலைவர் தீசன் குறிப்பிட்டார்.

* * *

மாணவர்களே! இளைஞர்களே இளம் விவசாயிகள் ஒன்றியத்தில் சேரவிரும்பினால் உடனே அண்மையில் உள்ள இளம் விவசாயிகள் கழகத்துடன் தொடர்பு கொள்க. அல்லது தலைவர், இ. வி. க. ஒன்றியம் இணுவில் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

## கலகலப்பான செய்திகள்

# மில்க்வைற் செய்திகள்

சமூக, சமையல் பணிகளை குறைவறச் செய்துவரும் மில்க்வைற் ஸ்தாபனத்தார் தமது இலவச அறிவு நூல்கள் வெளியீடுகள் வரிசையில் தற்போது ''மில்க்வைற் செய்திகள்'' என்னும் ஒரு செய்தித் தொகுப்பை வெளியிடுகின்றனர். பல அறிவுக் கருத்துக்களும், சமயப், பொருளாதார, சமூக வளர்ச்சிக் கொப்ப அரிய செய்திகளும் நிரம்பி வெளிவருகிறது. இந்த மாத வெளியீட்டின் முதலாவது இதழில் வெளியான தொகுப்பில் கலகலப்பைக் கொள்ளை கொண்ட அம்சம்.

### துறக்க வாழ்வு

Yesterday is dead, forget it
Tomorrow does not exist, don't worry
Today is here, use it
Eternity is ahead, Think of it

# தேமதுரத் தமிழோசை

அமெரிக்க 4H விவசாய கழக சர்வதேச மாற்றுப் பண்ணைத் திட்டத்தின் கீழ் இலங்கை வந்து ஜனவரி மாத நடுப்பகுதியில் கோண்டாவில் இளம் விவசாயப் பிரதிநிதியும், ஒன்றிய அங்கத்தவருமான குதிலக பிரகாஸ் என்பவரில்லத்தில் தங்கியிருந்த செல்வன் பற்றிக் அவர்களுக்கு இணுவில் ஜோதி இளம் விவசாயிகள் கழகம் 1—2—76 ல் பிரமாண்டமான ஊர்வலத்தையும், வரவேற்பு விழாவையும் நடாத்தியது. சிவநெறிப் புலவர் திரு. கனகராசா J. P. அவர்களும் அண்ணா கோப்பி ஸ்தாபன உரிமையாளர் திரு. P. நடராசா ஆகியோர் கலந்துகொண்ட மேற்படி விழாவில் செல்வன் பற்றிக் அவர்கள் ''விவசாயிகள் அனைவருக்கும் வணக்கம்'' என தமிழில் பேசியபோது விவசாயிகள் அனைவரும் கரகோசம் செய்தனர். விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும், தென்னங்கன்றுகள், அறிவு நூல்கள், பாடசாலை நேர அட்டவணைகள் போன்றவற்றை மில்க்வைற் அதிபர் வழங்கினார். ஜோதி விவசாய கழகத் தலைவர் S. K. தீசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கழக முன்னணியாளர் திரு. ஆ. நடராசா குழுவினரின் நாமும் நாடும் என்ற பொருள்பற்றிய வில்லிசை அரங்கேறியது.

வியாபாரத்திற் கழகு
விளம்பரம் செய்தல்
இன்றே தொடர்பு
கொள்ளுங்கள்

**மக்கள் குரல்**
**விளம்பர சேவை**
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

யார் பகைத்தாலும்
புகைக்க மறவாதீர்கள்!

**ஜனதா சுருட்டுகள்**
119/1.
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி : 33935

---

வெளிநாட்டு விவசாயப் புகழ் பேசிப் பயனில்லை
தாய் நாட்டு விவசாயம் உயர்த்திடவே
உதவிடுவீர்!

## சக்தி ட்றேடர்ஸ்

156, மலிபன் வீதி, கொழும்பு 11.

**2-2-76 எமது கடைத்திறப்பு விழாவில்**
**கலந்துகொண்ட அனைவர்க்கும் எமது நன்றி!**

---

பலசரக்கு வியாபாரப் பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## செல்வம் பிறதர்ஸ்

பெரிய கடை, மன்னார்

---

ஆண்டவனும் விரும்புகிறார்
அனைவரும் விரும்புகிறார்கள்!
நீங்களும் வாங்கிப் பாவியுங்கள்!

## பொபி பத்திகள்
BOBBY PATHIES
பொபி பத்திகள் தயாரிப்பாளர்கள்

நத்தராம் பொத்தை, குண்டசாலை.

---

பாவனைக்கு உறுதியானதும்
எங்கள் நம்பிக்கைக்கு ஏற்றதுமான
அலுமினியம், கண்ணாடிப் பாத்திர
வகைகளுக்கு ஏற்ற இடம்

## ரி. எஸ். ரி. பி. ரி. & கோ.
T. S. T. P. T. & CO.

**49,** டாம் வீதி, கொழும்பு 12.
தொலைபேசி : 31035

---

விவசாயிகளை
ஊக்கிடுவோம்! உயர்த்திடுவோம்!

## கதிர்மணி அன் கோ.
KADIRMANY & CO.
உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
கொமிசன் ஏஜென்ட்

**142, 144,** நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11
தொலைபேசி : 20246

---

சுத்தமான, சுவையான போசன வகைகள்
பலகார வகைகள் சூடான குளிரான
பானங்கள் போன்றவற்றிற்கு நாடுங்கள்

## அருணா லொட்ஜ்
ARUNA LODGE

236, கெயிசர் வீதி, கொழும்பு 11.

---

இளம் விவசாயிகள்
உற்பத்தி பெருகட்டும்!
நாட்டு வளம்
பெருகட்டும்!!

## ஸ்ரீ லங்கா ட்றேடர்ஸ்
SRI LANKA TRADERS

16, சென் ஜோன்ஸ் வீதி,
கொழும்பு – 11.
தொலைபேசி: 32415

---

விவசாய முயற்சியாம்
கால் நடை வளர்ப்பை
பெருக்குங்கள்!
உங்கள் கால்நடைகளுக்கு
தேவையான சிறந்த தீன்
வகைகளுக்கு நாடுங்கள்!

## குமாரவேல் கொம்பனி
KUMARAVEL COY.
(General Merchants & Commission Agents)

**217,** 5-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு – 11.

---

விவசாயிகளை ஊக்குவிப்பதே
நமது நோக்கம்

## ஸ்ரீ விஜயா ஸ்ரோர்ஸ்
SRI VIJAYA STORES
(உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
கமிசன் ஏஜண்ட்)

**205,** 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11.
தொலைபேசி 24102

---

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்
நல்ல முறையில் விற்பனை செய்ய
நாடுங்கள்

## லிங்கம் ட்றேடர்ஸ்
LINGAM TRADERS
(உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
கமிசன் ஏஜண்ட்)

**224,** கெயிசர் வீதி, கொழும்பு 11
தொலைபேசி 23406

---

★ சிறப்பான புத்தாண்டு இதழை எதிர்பாருங்கள் ★

## மயங்குகிருள் ஒரு மாது!

**மனைவி** - என்னங்க சிவராத்திரிக்கு நிச்சயம் நித்திரை விளிக்க வேண்டுமென்று சொன்னீர்கள் மயங்குகிருள் ஒரு மாது, தாகம், எல்லோரும் நல்லவரே உங்கள் விருப்பம் பார்க்க தீர்மானித்திருக்கிறேன்:

**இன்னும் 2 மணிநேரம் கூடுதலாக இருக்கிறது ஏதாவது ஆங்கிலப்படம் பார்ப்பமா?** — டோ

## ஸ்கூல் மாஸ்டர்

ஆசிரியர்— சார் சிவராத்திரியைப்பற்றி படிப்பிக்கச்சொன்னீர்கள்

சிவராத்திரி யென்றதும் என்னபடம் ஒடுகிறது சார், மிட்நைட்ஷோ என்ன என்று என்னையே கேட்கிறர்கள் அவர்களுக்கு என்னல் படிப்பிக்கவே முடியவில்லை, அதிபர்? . . .

K
K M P
P
நாள்தோறும் விவசாயி நல்முறையில் வளங்காண உழைத்திட்ட உற்பத்திப் பொருளின் விற்பனையை ஊக்கிடுவோம்

உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனையாளர்கள்

**கே. எம். பி. ஏஜென்ஸி**

**K. M. P. Agency**

( Commission Agent )

1-30, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11

போன்: 25444

ஊருக்கு உழைத்திடும் உன்னத நண்பரே!
பாரில் பயிர்வளம் பெருக்கியே வாழுவோம்!

**எஸ். எஸ். சண்முகம் & கோ.**

( உள்ளூர் விளைபொருள் சிறுதானியங்கள் விற்பனையாளர் )

போன்: 27420
200, பிரின்ஸ் வீதி,
கொழும்பு-11

பயிர்வளம் பெருக்குவோம்!
பஞ்சத்தைப் போக்குவோம்!
உயிர்தனைத் துறப்பினும்
ஊருக்காய் உழைத்திடுவோம்!

**V. செல்வராஜா & கோ.**

உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
( கமிஷன் ஏஜன்ட் )

27, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11

நாட்டின் முதுகெலும்பாம் நலம் தரும் விவசாயி!
ஏட்டின் கூற்றறிந்து ஏற்றம் காணுவீர்!

**★ மங்களாம்பிகை ஸ்ரோர்ஸ் ★**

பலவகை உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனையாளர்கள்.

போன்: 22971
178, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11

விருந்தினராக செல்லும்போதும், விருந்துபசாரங்களின்போதும் வாங்கி மகிழவும்
லக்கி லாண்ட் தயாரிப்புக்களான

0 ரீ ரைம்
0 (F) பமிலி அசோட்மென்ற்
0 (F) பமிலி ஒேரஸ் அசோட்மென்ற்
0 (F) பமிலி சொயிஸ் அசோட்மென்ற்
0 பொப்பியூலர் அசோட்மென்ற்
0 கிவ்ற் அசோட்மென்ற்
0 பட்டர் நற்ஸ்
0 மில்க் கிறீம்
0 கொக்கோ கிறீம்
0 கோல்டன் ஜெம்
0 மாறி

வடமாகாண ஏஜண்ட்:
கண்டி ஸ்ரோர், நெல்லியடி

**லக்கி லாண்ட் பிஸ்கட்**
**LUCKY LAND BISCUIT**

தயாரிப்பாளர்கள்:
நந்தாராம் பொந்தை
குண்டசாலை, கண்டி.
தொலைபேசி: 2537

இப்பத்திரிகை 68, சுந்தரபவனம், இணுவில் கிழக்கைச்சேர்ந்த இதன் உரிமையாளரும் ஆசிரியருமான (எஸ். கே. நீசன்) சி. கேதீஸ்வரன் என்பவரால் யாழ். மாநகர பலநோக்க கூட்டுறவுச்சங்க கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு மார்ச் மாதம் வெளியிடப்பெற்றது.